

மானா மக்கீன்

**பேனா முனையில்**
**அரை**
**நூற்றாண்டு**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா முனையில் அரை நூற்றாண்டு!




திருச்சித்துளம்தந்த

மணிமேகலைப் பிரசுரம்

ஆய்வும் தொகுப்பும்:

'இலங்கைத் தமிழ்மணி' மானாமக்கீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நர்கிஸ்

முஸ்லிம் பெண்கள் மாத இதழ்

## இலங்கை தமிழ்மணி மானா மக்கீனின் முத்தான மூன்று நூல்கள்

1. 'பேனாமுனையில் அரை நூற்றாண்டு' நூலில் சமுதாயத்திற்காக இன்று வரை தன் வாழ்நாளை அர்ப்பணித்து வரும் கண்ணியத்திற்குரிய அல்ஹாஜ் குலாம்ரசூல் அவர்களை மானாமக்கீன் உலகத்திற்கு வெளிச்சம் போட்டிக் காட்டியுள்ளார்.


2. 'முஸ்லிம் டைஜஸ்ட்' 3. 'என்னைக் கேளுங்கோ' இவ்விரு நூல்களும் மானாமக்கீனால் எழுதப்பெற்று 1996 மார்ச் 3ம் தேதி அய்யம்பேட்டையில் நடைபெற்ற குர்ஆன் மாநாட்டில் இலங்கை தொழில் அதிபர் மனித நேய மாமணி **அல்ஹாஜ் ஹாஸிம் உமர்** அவர்களால் வெளியிடப்பட்டது. முஸ்லிம் டைஜஸ்ட் புதுமையானதாகவும் அதே நேரத்தில் உலகத்துச் செய்திகளை ஒரு சேர அறிந்துணரும் உற்சாகத்தையும் தருகிறது. வரவேற்க வேண்டியது! 'என்னைக் கேளுங்கோ' அந்த கால தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல் இக்கால தலை முறையினருக்கும் பொருந்தும்படியான பதில்களை தந்துள்ள மிஸ்டர்.கொட்டாப்புளியார் நம்மை அசத்துகிறார். இந்நூலை தொகுத்து தமிழகத்திற்கு பரிசளித்த் இலங்கைத் **தமிழ்மணி மானாமக்கீன்** உதவிய தென்னூர் **மௌலவி என்.எம். ஹஸன் முஹம்மத் பாகவி** அவர்கள் மட்டுமல்ல, துணை புரிந்த வள்ளல் **ஹாஸிம் உமர்** அவர்களும் நன்றிக்குரியவர்கள்! அத்துடன் மணிமேகலைப் பிரசுரம் இனி தொடர்ந்து முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடும் என்ற தன் அறிவிப்பை செயலாக்கி வரும் **திரு.லேனா தமிழ் வாணனும்** பாராட்டுக்குரியவரே! அல்ஹம்துலில்லாஹ்!

ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் நிறை



சாந்தி வளாகம்

மே - '96

## பேனா முனையில் அரை நூற்றாண்டு

நூலாசிரியர் :
இலங்கைத் தமிழ்மணி மானா மக்கீன்

வாழ்க்கை வரலாற்று நூல் எழுதுவது ஒரு கடினமான பணி. இலங்கைத் தமிழ் மணி மானா மக்கீன் அவர்கள் 'பேனா முனையில் அரைநூற்றாண்டு' என்ற நூலை மிகவும் சிறப்பாக எழுதித் தமிழ் உலகுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளார். பன்னூலாசிரியர் அல்ஹாஜ் திருச்சி,குலாம் ரசூல் அவர்கள் வாழ்க்கை வரலாற்றை அரிதின் முயன்று தொகுத்து எழுதியுள்ளார் மானாமக்கீன் அவர்களுக்கு உதவிய தொழில் அதிபர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் அவர்களும் தமிழர்களின் பாராட்டுக்கு உரியவர்.

VIRAKESARI வீரகேசரி

## உடனே வாங்குங்கள்! படியுங்கள்

(விமர்சனம்)

''பேனா முனையில் அரைநூற்றாண்டு'' எனும் நூல் வாழ்க்கைப் போர்முனையில் அரைநூற்றாண்டு காலம் என்பது போல கதைபோல, சரித்திரம் போல கட்டுரைபோல புதினங்களின் தொகுப்புப் போல, புதுமை கருத்துக்களின் பெட்டகம்போல இன்றைய பரபரப்பும் விறுவிறுப்பும் நிறைந்த பத்திரிகை நடையிலே எழுதப்பட்டிருக்கிறது என தாருல் குர் ஆன் எனும் இந்திய சஞ்சிகை தமிழ்மணி மானா மக்கீன் எழுதிய நூல் குறித்து விமர்சனம் எழுதியுள்ளது. உடனே வாங்குங்கள் படியுங்கள் என்பதுபோல விமர்சனம் அமைந்துள்ளது அல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தகம் புு(து)த்தகம் பு(து)த்தகம் பு(து)

குமுதம்



ஒலிம்பிக் வீரர்கள் வீராங்கனைகள் 1896-1992

*(சேரன்-பக், 190-ரூ. 45- சாந்தி பள்ளிகேவ் அண்ணாசாலை, சென்னை 2)*

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற உலக வீரர்களைப் பற்றிய சிறுகுறிப்புகள்.

நூறல்கள்

*(எஸ். சத்தியமூர்த்தி-பக். 164- ரூ. 40 கலைஞன் பதிப்பகம், 10, கண்ண தாசன் சாலை, சென்னை 17)*

ஒரு வார இதழில் வந்த கடைசிப் பக்கக் கட்டுரைகளின் தொகுப்பு.

பேனா முனையில் அரை நூற்றாண்டு - திருச்சி குலாம் ரசூல்

*(தொகுப்பு: மானாமக்கீன் - பக். 142 -ரூ. 26 மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை 17)*

இஸ்லாமியத் தமிழ் எழுத்தாளரைப் பற்றி இலங்கை எழுத்தாளர் எழுதியது.

## பேனா முனையில் அரை நூற்றாண்டு

**ஆசிரியர்: (ஆய்வும் தொகுப்பும்) மானாமக்கீன். வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை-17. பக்: 142, விலை: ரூ.26/-**

திருச்சியில் வசிக்கும் மூத்த எழுத்தாளர் குலாம் ரசூல் பற்றிய வாழ்க்கை வரலாற்றை படம்பிடித்த மாதிரி தொகுத்து எழுதியிருக்கிறார் 'இலங்கைத் தமிழ்மணி' மானாமக்கீன்.

மணிமேகலைப் பிரசுரம் முதன் முதலாக முஸ்லிம் எழுத்தாளர் வரலாற்றை வெளியிடும் புதிய செய்தியும் இந்நூல் மூலம் கிடைக்கிறது. திருச்சியில் இப்படியும் ஒரு சாதனை எழுத்தாளர் வாழும் செய்தி இந்நூல் மூலம் கிடைக்கிறது. திருச்சியில் சங்கிலியாண்டபுரத்தில் உள்ள 'மதனி மஸ்ஜித் தோற்றம் கலர் படமாக புத்தகத்தை அலங்கரிக்கிறது.

குலாம் ரசூல் எழுதிய டைரிக்குறிப்புகளிலிருந்து விறுவிறுப்பான இஸ்லாமிய வாழ்க்கை முறைகள், அவர் எழுதிய சிறுகதைகள், கட்டுரைகள், பக்கம் முழுக்க பரவிக் கிடக்கிறது.

— அறிவுமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனா முனையில் அரை நூற்றாண்டு

**ஆசிரியர்: இலங்கை தமிழ்மணி மானாமக்கீன்**

**பக்கங்கள்: 146 விலை ரூ. 26-00**

தமிழக இஸ்லாமிய எழுத்தாளர் ஒருவரைப் பற்றி வித்தியாசமான முறையில் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் ஒருவர் ஆய்ந்து தொகுத்து அளித்திருக்கும் வாழ்க்கை வரலாற்று நூல்! தமிழக முஸ்லிம்களின் கலாச்சார வயலில் களைகளாய் முளைத்துவிட்ட, இஸ்லாத்திற்கு விரோதமான அனாச்சாரங்களை எதிர்த்து தமது 'ஷாஜஹான்' பத்திரிகை மூலமும், பிற இதழ்கள் மற்றும் நூல்களின் மூலமும் உரத்த குரல் எழுப்பி 1950-களில் பரபரப்பை ஏற்படுத்திய மூத்த எழுத்தாளர் திருச்சி 'டி.எஸ்.ஏ ரசூல் தான் நூலின் நாயகர்.

16 வயதில் எழுதத் தொடங்கி இன்று 72 வயதில் 'மார்க்கச் சட்டங்கள்' நூல் மூலம் 'செஞ்சுரி' அடித்திருக்கும் ரசூல்சாஹிபின் 56 ஆண்டு கால இஸ்லாமிய எழுத்துச் சேவையை, அவரது பத்திரிகை ஆக்கங்கள், நாட்குறிப்புகள் மற்றும் அவரிடமே நேரில் கேட்டறிந்த தகவல்கள் மூலம் தனக்கேயுரிய நடையில் சுவையாக விவரித்துள்ளார் மானா!

வாசகர்களின் கேள்விகளுக்கு அனல் பறக்கும் பதில்களை அளித்த 'மிஸ்டர்-கொட்டாப்புளி'யாக, கருத்தாழமிக்க தலையங்கங்களைத் தீட்டிய பத்திரிகாசிரியராக, கதாசிரியராக, கட்டுரையாசிரியராக, ஓவியராக, அனாச்சார ஒழிப்புப் போராட்டக்காரராக - ரசூல் சாஹிபின் பல பரிமாணங்களை நூல் காட்டுகிறது.

சினிமா பத்திரிகைகளிலும் அவர் எழுதினார்; துப்பறியும் நாவல் எழுதினார் என்ற தகவல்கள் ஆச்சரியமளிக்கின்றன.

அவரது சில கேள்வி-பதில்கள், சிறுகதைகள், தலையங்கங்கள், ஷாஜஹானில் வெளியான கருத்துப் படங்களுடன் பல்சுவை சஞ்சிகையாக நூல் ஆக்கப்பட்டுள்ளது.

**மணிச்சுடர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரசூல் பற்றி
# இலங்கை மானா மக்கீன்
# பேனாமுனையில் அரை நூற்றாண்டு!

திருச்சிக்கு பெருமை சேர்த்துவரும் திருச்சி குலாம் ரசூல் அவர்களின் வாழ்க்கைச் சரிதம் 'பேனா முனையில் அரை நூற்றாண்டு'! என்னும் நூலாக எழுதி, அதை திருச்சியில் 22-10-95 இல் ஃபெமினா ஹோட்டலில் மிக விமரிசையான விழா நடத்தி வெளியிட்டுள்ள பெருமை இலங்கைத் தமிழ்மணி மானாமக்கீன் அவர்களையே சாரும்.

திருச்சியிலும் தமிழகத்திலும்,'திருச்சி ரசூல்' என்னும் பெயர் அனைவருக்கும் தெரிந்ததாகும். நூலாசிரியர், கட்டுரையாளர், பத்திரிகையாளர், கருத்தளவையர், சிந்தனையாளர், சிறுகதை வல்லுநர், சரித்திர நாவல் புனைபவர், மார்க்க ஞானத்தில் தீர்க்கமானவர், நூல் வெளியீட்டாளர் என்பதோடு சமுதாய,சன் மார்க்கத் தொண்டர் ஒரு காலத்தில் மூஸ்லிம் லீகின் முன்னோடித் தலைவர் என்றெல்லாம் எல்லோராலும் அறியப்பட்டவர்.

சொந்தக்காரர் அல்லது தன் ஊரைச் சேர்ந்தவர் எவ்வளவு தான் ஏற்றமுடையவராக இருப்பினும் சலாம் சொல்வார்கள் மக்கள்; ஆனால் அத்தகையவர் சரித்திரம் எழுத வேண்டும என்று எண்ணுவதில்லை. காலங்கடந்த பிறகு, ஆகா! அவரின் வரலாற்றை அவரைக் கொண்டே எழுதச் செய்யாமல் விட்டு விட்டோமே! என்று அங்கலாய்த்துக் கொண்ட நிகழ்ச்சிகளும் உண்டு.

தமிழக முஸ்லிம் எழுத்தாளர்களுக்கு இடையில் நிலவும் இந்தப் பெருங்குறையை 'இலங்கைத் தமிழ்மணி' மானா மக்கீன் ரசூல் சாஹிப் வரலாற்றைப் புத்தகத்திற்குள் அடக்கிக்கொடுத்து தனிச் சிறப்பைத் தட்டிக் கொண்டுள்ளார்.

பேனா முனையில் அரை நூற்றாண்டு! - என்னும் நூல் வாழ்க்கைப் போர் முனையில் அரை நூற்றாண்டு காலம் என்பது போல, கதை போல சரித்திரம் போல, கட்டுரை போல,புதினங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தொகுப்பு போல, புதுமை கருத்துக்களின் பெட்டகம் போல எழுதப் பெற்றிருக்கிறது.

பத்திரிகையாளராக இருந்து வரும் திருச்சி ரசூல் பற்றிய வாழ்க்கை வரலாறு இலங்கை பத்திரிகையாளரான மானா மக்கீன் அவர்களால் இன்றைய பரபரப்பும், விறுவிறுப்பும் நிறைந்த பத்திரிகை நடையிலேயே எழுதப் பெற்றிருக்கிறது.

கதை, புதினம் எழுதுவதில் ரசூல் வல்லவர் என்பதால், நூலும் ஒரு புதின அமைப்பிலும் எதிர்பார்ப்பு நடையிலுமாகச் செல்கிறது. எடுத்தால், படித்து முடித்து அசை போட்டுப் பார்த்து ஆச்சரியம் கொள்ளவும், ஆனந்தததில் பல அழகிய வாழ்த்துக்கள் சொல்லவும் இந்நூல் தூண்டுகிறது.

நூல் வெளியீட்டு விழாவுக்கு ஃபிம்பினர் அதிபர் எஸ், எம். எம். முகமது இப்ராஹீம் முன்னிலையில் இலங்கை தொழில் அதிபர் ஹாஸிம் உமர் தலைமை வகித்துள்ளனர். இலங்கை மூதவை தலைவர் எஸ். இஸட் எம்.மசூர் மௌலானா, கல்கண்டு-குமுத ஏடுகளின் லேனா தமிழ்வாணன், இலங்கை தெய்னார் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.

அதிபர் ஹாஸிம் உமர், இந்த வரலாறு வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்துள்ள வள்ளலாகவும் இருக்கிறார், எழுதியவர், எழுத துணை புரிந்தவர், வெளியிட உதவியவர், விழா நடத்தியவர்கள் அனைவரும் இலங்கைச் சீமையினர், முதல் பிரதியைப் பெற்றவர் அய்யம்பேட்டை ஹாஜி அப்துர் ரகீம் சாஹீப்.

ரசூல் சாஹிபின் வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது; அதுபோல அவரின் எழுத்தோவியங்களும் தொகுக்கப்பட்டு வெளியிட நிச்சயம் மானா மக்கீன் அவர்களும், அதிபர் ஹாஸிம் உமர் அவர்களும் தூண்டுகோலாக அமைய வேண்டும் என ஆசிக்கிறோம்.

செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்வதற்கு முன்வின்று செய்துள்ள சீரிலங்கைச் சீமையினருக்கு தமிழ் எழுத்துலகம் நன்றியும் பாராட்டும் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறது.

- கே, எம், கே.

---

மாத இதழ்
தாருல் குர்ஆன்
DARUL QURAN
ஆசிரியர்:- பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் எம்.ஏ.
ஆண்டு 15-1995 நவம்பர் ஹிஜ்ரி 1416- ஜ' ஆகிர் இதழ் 9-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா முனையில் அரை நூற்றாண்டு - நூல் அறிமுகம்

'லைட் ரீடிங்' புகழ் மானா மக்கீனின் மற்றுமோர் ஆக்கம், 'பேனாமுனையில் அரை நூற்றாண்டு' நூல் ஆகும்.

இஃதொரு மணிமேகலைப் பிரசுரமாகும். 148 பக்கங்களைக் கொண்டது. அட்டைப்படம் கவர்ச்சியாகவும் கான்சுபோரைச் சுண்டி இழுக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

அல்ஹாஜ் திருச்சி குலாம்ரசூல் அரை நூற்றாண்டு காலமாக ஆற்றிய எழுத்துப் பணியினைச் சிறப்பாகவும் சுவையாகவும் தந்துள்ளார், தமிழ்மணி மானா மக்கீன்.

பதின்நான்குப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் புதுமை என்னவென்றால், 'முன்னுரை' என்று குறிப்பிடாமல், 'எதற்கு இந்த வரலாறு' என்ற வினாவுடன் நூல் ஆரம்பமாகின்றது. நூலில் இரு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இக்கதைகள் 1947 இல் இலங்கையில் வெளியான தினகரன், சினிமாலோலன் ஆகிய பத்திரிகைகளில் வெளியானவை என்று அறியும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

நூலில் தரப்பட்டுள்ள தகவல்கள் ஒரு புதிய கண்ணோட்டத்தில் அமைந்துள்ளன.

முஸ்லிம் எழுத்தாளர்களின் வரலாற்று நூல்கள் இதுவரை மூன்று என குறிப்பிடப்பட்டுள்ளது. கவிஞர் அப்துல் காதர் வெப்பை அவர்களின் 'என் சரிதை' நூலையும் சேர்த்து நான்கு எனக் கொள்ளலாம்.

அரை நூற்றாண்டு அறுவடைகளில் சில' என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ள நூற்பட்டியல் இறுதியில், வெளியீடு, பக்கம், விலை முதலிய விபரங்களுடன் தனியாகத் தொகுத்திருந்தால், சிறப்பாக இருந்திருக்கும்.

பொதுவாக நூலை வாசிக்கும் போது, ஓர் எழுத்தாளரின் வரலாற்றை வாசகர்கள் புரிந்து கொள்ளுமளவுக்கு தமிழ்மணி மானாமக்கீனின் உரைநடை அமைந்திருப்பது பாராட்டத் தக்கதாகும்.

சாரணா கையூம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விமர்சனம்:

# "பேனா முனையில் அரை நூற்றாண்டு"

நூல்: "பேனா முனையில் அரை நூற்றாண்டு."
ஆய்வும் தொகுப்பும்: "தமிழ்மணி" மானா மக்கீன்.
வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், த. பெட்டி: 1447,
தியாகராய நகர், சென்னை 600017.
விலை: ரூபா 26/- (இந்தியாவில்). பக்கங்கள்: 142.

சமூகத்தில் சாதனை நிகழ்த்தியவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், சாதனைகள் பற்றிய தொகுப்பையும் அறிந்துகொள்ள பலரும் ஆர்வம் காட்டுவது இயற்கை. எழுத்தாளர்கள்- கலைஞர்களது கடந்த காலத்தையும்- எதிர்கொண்ட வெற்றி தோல்விகளையும் சுயசரிதையாகப் படித்திருக்கின்றோம். சிலர் தங்களைப் பற்றி எழுத- வேறு சிலர் பிறரைப் பற்றி எழுதுகின்றனர். அற்புதமான திறமை கொண்ட நமது 'பத்தி' எழுத்தாளர் 'தமிழ்மணி' மானா மக்கீனின் பிந்திய வெளியீடு "பேனா முனையில் அரை நூற்றாண்டு" பார்வைக்குக் கிடைத்தது. இந்தியாவிலுள்ள தமிழ் எழுத்தாளர் திருச்சி குலாம் ரசூல் அவர்களின் வாழ்வின் பல பகுதிகளையும் அவர் பணிகளையும் சிறப்பாக ஆய்வு செய்து சுவைபாகத் தொகுக்கப்பட்ட நூல் சென்னை மணிமேகலைப் பிரசுர வெளியீடாக மலர்ந்துள்ளது.

அறு வைக் கட்டுரைகளாக அமையாமல், எடுத்த எடுப்பிலேயே, 142 பக்கங்கள் கொண்ட முழு நூலைப் படித்து முடிக்கத்தக்க வகையில் அத்தியாயங்களை அற்புதமாக அமைத்துள்ளதோடு- சம்பவங்களையும் தொடர்ச்சியாக வளர்த்துச் செல்கிறார் "மக்கீன்"

உதாரணத்துக்கு சில பகுதிகள்:-

"இந்நூலைப் பற்றி நான் அறிந்த ஒரேயொரு துணுக்குத் தகவலை இங்கே சொல்லிவிட்டு மேலே போக அனுமதியுங்கள்"

"நல்லது. அடுத்த அத்தியாயம் நம்ப முடியாத பல தகவல்களுடன் காத்துக் கொண்டிருக்கிறது. செல்லலாமா?"

"ஆகவே அவருடைய அரசியல் ஈடுபாட்டைக் காட்ட அடுத்த அத்தியாயத்திற்கு உடனடியாகவே அழைத்துச் செல்கின்றேன்".

"இதழ்களின் மன்னரைக் காணத் தாமதிக்கலாமா? வாருங்கள். இப்பொழுதே பார்த்திடலாம்."

"பன்னூலாசிரியரின் நாட்குறிப்பைக் கொஞ்சம் பேசச் சொல்கிறேன், கேளுங்கள்"

"வருகிறீர்களா, கொஞ்சம் வட இந்தியப் பயணம் மேற்கொள்வோம்..."

-இப்படியாக இடையிடையே 'மக்கீன்' சுவாரஸ்யமாக நேர்முக வர்ணனை செய்து நூல் முழுவதையும் சுவைக்க வைத்துவிடுகிறார்.

ஏழ்மை காரணமாக பத்தாம் வயதில் ஐந்தாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திய குலாம் ரசூல் பல தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு, இள வயதில் சினிமாப் பித்துப் பிடித்து முதல் நாள்- முதல் காட்சி- முதல் டிக்கட்- முதல் நுழைவு என்றும் வாழ்ந்திருக்கின்றார். பின்னர் அரசியலிலும் ஆர்வம் காட்டியிருக்கின்றார். சினிமா, அரசியல் என்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெல்லாம் எழுதியவர் கால ஓட்டத்தில் புதிய சிந்தனையுடன் சன்மார்க்கக் கட்டுரைகளையும் சீர்திருத்த எழுத்தோவியங்களையும் வரைந்தார்.

நூற்றிரண்டு நூல்களை எழுதிய குலாம் ரசூல் எழுபத்திரண்டு வயதைக் கடந்து தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கின்றார். அவருக்க இறை நம்பிக்கை அதிகம்-

"இந்த எழுத்து இயந்திரத்தை இயக்கும் பொறுப்பை 'அவன்' எடுத்துக் கொள்கிறான். எப்படி இந்த வயதிலும் எந்தவிதத் தளர்வுமில்லாமல் விரல் நடுக்கமின்றி எழுதி முடிக்கிறேன் என்பது அவன் ஒருவனுக்கே வெளிச்சம்" என்று எல்லாப் புகழையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் அறிஞருக்கு "இறையருள் இலக்கியம்" என்ற பட்டம் முற்றிலும் பொருத்தமானதே.

இந்நூலில் இலங்கையில் வெளியான பத்திரிகைக் குறிப்புகள்- அவை இந்தியாவில் பெற்ற செல்வாக்கு போன்ற வரலாற்றுக் குறிப்புகளும் காணப்படுகின்றன.

1953-ல் பன்னூலாசிரியர் ரசூல் கையால் எழுதிய நாட்குறிப்பின் புகைப்படப் பிரதியுட்பட, அவர் 1947-ம் ஆண்டில் கொழும்புப் பத்திரிகைகளான

ரன்" ஆகிய பத்திரிகைகளுக்கு எழுதிய கதைகளும் முழுமையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பன்னூலாசிரியர் ரசூல் அவர்களின் கேள்வி-பதில் பகுதியும், நடப்பதும் நடக்கச் செய்வதும் என்ற சித்திர விளக்கப் பகுதியும் சிந்தனையைத் தூண்டி சிறந்த முடிவை எடுக்க வைக்கின்றன. உதாரணம்:-

இஸ்லாம் பகிரங்கமானது. அதனை இரகசியமாக மூடி வைத்து வயிற்றுப் பிழைப்பு நடத்திவரும் கும்பலை விரட்டியடியுங்கள்.

பணக்காரர்களெல்லாம் பரம தயாளர்களாக மாறிவிட்டால் பாருலகிலே பசியுட் பட்டினியும் பஞ்சாய்ப் பறந்திடாதா?

குத்பா பிரசங்கங்களை அரபியில் கேட்டவர்களுக்குத் தாலாட்டுப் பாடும் வகையில் ஓதுவதை விட அப்பிரசங்கங்களைத் தாய் மொழியில் எடுத்துக் கூறுவதில் எதிர்பார்க்கும் பலனும் கிடைக்க ஏதுவாக இருக்குமே.

அழகான வர்ணப் படங்களை நூலில் சேர்த்துள்ள ஆசிரியர் 76-ம் பக்கத்தில் தெளிவற்ற படத்தைப் பிரசுரித்துள்ளார். பழைய படம் என்றாலும் முக்கியமான படம் என குறிப்பு சொல்வதால் ஏற்றுக் கொள்வோம்.

நூலைப் படித்து முடித்ததும் பன்னூலாசிரியர் திருச்சி குலாம் ரசூல் நினைவில் நிறைவது போல, நூலை எழுதிய நமது "தமிழ்மணி" மானா மக்கீன் அவர்களும் நினைவில் நிறைந்து பாராட்டுக்குரியவராகின்றார்.

கதை கட்டுரைகளை எப்படித் தொடர்ச்சியாகவும் சுவையாகவும் அமைக்கலாம் என்பதற்கும், புதுமையாகவும் இனிமையாகவும் தொகுக்கலாம் என்பதற்கும் உதாரணமாகத் திகழும் இந்நூல் இலகு தமிழில் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பாடல்களை மீண்டும் மீண்டும் படிப்பது போல இதனையும் மீண்டும் மீண்டும் படித்து மகிழலாம்.

-உடுவை
எஸ். தில்லை நடராஜா

தினகரன்

தினகரன் THINAKARAN

ஏப்ரல்
14-96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முஸ்லிம் முரசு'

## பேனா முனையில் அரை நூற்றாண்டு

பேரெழுத்தாளர் பெரியவர் திருச்சி குலாம் ரசூல் அவர்களின் வாழ்க்கைப் பக்கங்களை வார்த்தைப் படையலாக்கிச் சுடு ஆறாமல் சுவை குன்றாமல் பரிமாறியுள்ளார், இலங்கை வாழ் எழுத்துவேந்தர் 'இலங்கைத் தமிழ்மணி' மானாமக்கீன்.

ஓர் எழுத்தாளரின் வாழ்க்கை வரலாற்றோடு அவரது எழுத்தாக்கங்களையும் இன்றைய வாசகர்கள் படித்துணர அமைத்திருப்பது நல்ல முயற்சி.

இஸ்லாமிய எழுத்துலக வரலாற்றையும் அறிய இந்நூல் உதவுகிறது.

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. பக்கங்கள்: 142. விலை ரூ.26.

## இலங்கை இதழ் தினமதி

**தமிழ்மணி மானா மக்கீன்** 'எழுதிய **பேனா முனையில் அரை நூற்றாண்டு**" எனும் நூல் வெளிவந்துள்ளது. எழுத்தாளரும் பன்னூல் ஆசிரியருமான திருச்சி குலாம் ரசூல் அவர்களைப்பற்றி தனக்கே உரித்தான சுவையான பாணியில் அன்பாக மானா மக்கீன் அவர்கள் எழுதியுள்ளார்.

மானாவுக்கென்று தனிப்பாணி உண்டு. அதில் தமிழ் நாட்டு பேச்சு வழக்கும் வாசமடிக்கும். எடுத்தவுடன் வாசித்து முடிக்கும் வரை அலுக்காதிருப்பது அவரது சிறப்புப்பணி. பெருமையின்றி சகலருடனும் சகஜமாக பழகும் மானாவைப் 'போன்றே அவரது எழுத்துக்களும் சரளமாக இருக்கும்.

மானா மக்கீனின் இந்த முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

**மு.பா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமாஅத்துல் உலமா

மாத இதழ் — திருநெல்வேலி ஜங்ஷன்.

இலங்கையின் பிரபல எழுத்தாளர் மற்றொரு தமிழக எழுத்தாளரின் வரலாற்றினை வெளிப்படுத்துவதே இந்நூல். உலகின் இரு முனைகள் பிரபலம் எனக் குறிப்பிட்டு ஒன்று யுத்த முனை, மற்றொன்று பேனா முனை. ஆனால் முந்தியுதில் அரை நூற்றாண்டைச் சந்தித்து (50 ஆண்டுகள்) யாருமிலர். ஆனால் பேனா முனையிலோ நேர் எதிர், என ஆசிரியர் குறிப்பிட்டு விட்டு, அவ்வாறு இருப்பவர்களில் மேலைய நாட்டில் நிறைய உண்டு. இங்கோ குறைவு என்றும் அங்குள்ளவர்களின் பற்பல வரலாற்று வாழ்க்கை நூற்கள் வருவதுண்டு. இங்கேயோ அபூர்வம் எனக் குறிப்பிட்டது நூற்றுக்கு நூறு உண்மை என்போம். சமுதாய எழுத்துலக வேந்தராக 56 ஆண்டுகளாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் திருச்சி அல்ஹாஜ் குலாம் ரசூல் அவர்களின் வாழ்க்கையில் பல கோணங்களை இந்நூலில் நாம் சந்திக்கிறோம். 72 வயதைக் கடந்த இந்த முதியவரின் உணர்வுகள் எழுச்சியூட்டும் எழுத்துக்கள் என்றும் இளமையாகவே காட்சியளிப்பது அல்லாஹ்வின் பெரும் அருட்கொடை.

சமுதாயத்துக்காகவே உழைத்து தனது வாழ்வையே தியாகம்செய்து சந்தனக் கட்டையாக மணம் பரப்பிக் கொண்டிருக்கும் அவர்களது மாளிகையை படத்தில் பார்க்கும் எவரும் கண் கலங்காமல் இருக்க முடியாது. அவர்களே அறியாத பலர் அவர்களின் எழுத்தால் நேர்வழி பெற்றிருப்பார்கள். அவர்கள் செல்ல முடியாத இடத்திலெல்லாம் அவர்களின் எழுத்து சென்றடைந்திருக்கும். வளரும் தலைமுறையினருக்கு ஒரு சிறப்பான எழுத்தாளரை அடையாளம் காட்டி வரலாற்றில் பதித்த சகோதரர் மானா மக்கீன் அவர்கள், சமுதாயத்தின் ஒட்டு மொத்த நன்றிக்குரித்தாகிறார். இந்த நூலை வெளியிட்டு பெரும் பாக்கியத்தை தட்டிச் சென்ற வெளியீட்டாளரைப் பாராட்டுவதோடு அனைவருக்கும் இறைவன் நேர்வழிகாட்டவேண்டும் என பிரார்த்திக்கவும் செய்கிறோம். மணிமேகலை நிலையத்தாருக்கு ரொம்ப நன்றி.

(M. A. M.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sunday Observer

Sri Lanka's English newspaper with the largest circulation

AVAILABLE ON THE WORLD WIDE WEB OF THE INTERNET

## *Tiruchi Gulam Rasool: Peana Munaiyil Atai Nootandu*

by Thamilmani Maana Mackeen

**Manimehalai Publications, Madras, India**

Before a Sri Lankan consciousness could evolve among Tamil speaking writers in the country, it was the dominance of lesser-known writers in Tamil across the Palk Strait, who almost eclipsed whatever the local talent that was available, in the print medium in Colombo.

Of course in the North, there was the *Eelakesari*, which patronised and encouraged local writers. But it was after the advent of the late K. Kailasapathy (a Tamil intellectual and scholar) as editor of the *Thinakaran* in the late 50s, did a Sri Lankan Tamil writing took its own shape.

### Dramatist

Among those who wrote regularly to the local Tamil newspapers was Tiruchi Gulam Rasool. Whatever his literary merit had been, when judged by the present day critical standards, it is noteworthy to assess his life and style of this writer. This is because his contributions too form a part of Sri Lankan Tamil literature and its history.

This task had been taken by a leading freelance Tamil journalist in this country, Thamilmani Maana Mackeen. He is not only a literary and arts columnist, but also a dramatist, short story writer, and a master of ceremonies, particularly during the '70s, when Western pop music came into encroach the otherwise staid light songs, as they were called dished out by untrained local singers in Tamil.

Maana Mackeen is an underestimated journalist in Tamil. His style is his personality. He is a pace-setter in local Tamil journalism. His conversational and concise writing skills is far to be beaten. His perception on many matters, including politics is remarkable and yet he had not been made use of properly in the local press, although he had compiled a page of titbits and critical comments on practically all subjects, in the *Thinakaran* some time ago.

Although he is a Muslim by faith, he is eclectic as the great Moghul Emperor Akbar had been. Also he is not parochial. His interests extend beyond Tamil or Tamil-speaking interests. That's great.

Mackeen is the author of two compilations titled *Light Reading* and two more books by him are in print in Madras now. The book under review *Peana Munayil Atai Nootandu* (meaning half a century at the point of a pen) is the first researched account on a Tamil Nadu Muslim author undertaken by a Sri Lankan writer. This book is sponsored by Hashim Omar, his benefactor since the '70s. The latter is a leading textile manufacturer in the country and he belongs to the Memon community. A frontline publisher in Madras, the Manimehalai Pirasuram, which had published more than 3,000 titles, has for the first time published a biography of a Muslim writer.

Unlike a biography *per se*, Mackeen's book retells in an easy style a hudnred odd items pertaining to his subject under 14 heads. Attractively produced this



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

142-page book has nearly a dozen photographs in colour. They are pictorial records of Tiruchi Gulam Rasool.

The writer Mackeen is particular that his writing should not be heavy and wants the reader to finish reading the book in one breath, and he succeeds in his aim. that's journalism desirable. However, the first two chapters to me read like puff writing. But this is compensated by adequate coverage of Rasool and his works in subsequent chapters.

## Diary

Tiruchi Rasool, 73, had maintained a diary for more than 40 years. Having been very poor, he didn't have any formal education. He is writing for the last 40 years, on religious matters and writes short stories articles etc. He used to write to film magazines, including *Cinema Lolan*, published in Colombo.

He had been a member of the Muslim League in Tamil nadu and had written fiery political commentaries. Later he joined the Self-Respect Party. He had visited Sri lanka in 1952, to canvas subscription from Lankan Muslim readers for *Shah Jehan* which he edited between 1951-1954. The biographer in his fifth chapter includes excerpts from the magazine, which speak for themselves. This is something the research students, particularly of Islam will benefit immensely.

Tiruchi Rasool wrote profusely to the Sunday edition of the *Thinakaran*, then edited by V. K. P. Nathan since 1946 while the other writers from Tamil Nadu wrote to the *Virakesari*. Then from 1951, he wrote to the *Virakesari* and *Suthanthiran*. This writer had published mroe than 100 booklets mainly on religion. He had five nom-de-plumes.

Maana Mackeen has also included two pieces of Rasool's creative writing and other articles.

I would have welcomed a critical evaluation of Tiruchi Rasool's creative writing. Perhaps that would be a subject for another book by Maana Mackeen, the indefatigable crusader.

**K.S. Sivakumaran**

---

**மானா மக்கீன் நூல் வெளியீடு**

ஜமா அத்துல் உலமா (நெல்லை) மாத இதழில்

பிரபல எழுத்தாளர் 'ஹிமானா ஸையித்'

''பேனா முனையில் அரை நூற்றாண்டு'' என்ற நூல் வெளியீட்டு விழா திருச்சி ஃபெமினா ஹோட்டலில்! நூலாசிரியர் இலங்கை தந்த தமிழ்மணி மானமாக்கீன்! இவர் எழுதுவதுதான் "லைட்ரீடிங்"கே தவிர எழுத்து மிகமிக ''ஹெவியானது'' என்பதை நூல் உணர்த்துகிறது. ரசூல் ஸாஹிபின் வாழ்க்கைச் சரிதத்தை ஒரு நாவலுக்குரிய சுறுசுறுப்புடன் — சுவையுடன் நகர்த்தியிருக்கும் மானா மக்கீனே! உன் நடையில், பேச்சில் மட்டுமல்ல விறுவிறுப்பு — அது உன் செயல்பாடு! செயல்திறன் அனைத்திலும் செறிந்துள்ள அணுவுக்குள்ளேயே அது நியூட்ரானாய் எலெக்ட்ரானாய்ச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது என்பதைப் புரியவைத்து விட்டாய்! மகிழ்ச்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனத்தவரது கண்ணொழு களிப்பு!

குடமணி?

தமிழக முஸ்லிம் எழுத்தாளர்களிடையே மிகவும் பிரபல்யம் பெற்ற எழுத்தாளரான திருச்சி குலாம் ரசூல் பற்றிய விவரத் திரட்டாக வெளி வந்திருக்கிற ஒரு நூலே "பேனா முனையில் அரை நூற்றாண்டு". இலங்கை எழுத்தாளர் மானா மக்கீன் எழுதியுள்ள இந்நூல் தமிழ் நாட்டின் மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்திருக்கிறது.

பதினான்கு தலைப்புகளில் திருச்சி குலாம் ரசூல் தொடர்பான பல விஷயங்களை இந்நூல் சொல்கின்றது. நூலின் நாயகரான திருச்சி ரசூலின் வாழ்வோடு சம்பந்தப்பட்ட முக்கிய படங்கள். சில வர்ணத்தில் பிரசுரிக்கப்பட்டிருப்பது நூலின் கவர்ச்சிக்குத் துணை செய்கிறது.

அப்படைப்பாளியின் வாழ்வு நிகழ்ச்சிகளை எழுத்தாக்கி, நூலாக வெளியிடுவது அரும் பணியே. அதற்கு தூண்டுகோலாகவும், உதவி ஒத்தாசை புரிந்ததில் துணையாகவும் இருந்தவர், பிரபல கொடைவள்ளலும், வர்த்தகருமான இலங்கை மேமன் சமூகத்தைச் சேர்ந்த அல்ஹாஜ் ஹாஸிம் உமர்

> பிரபலமான ஒரு படைப்பாளியைப் பற்றி கதை சொல்லவந்த இடத்தில் நூலாசிரியர் அவசியமில்லாமல் அடிக்கடி இடையிற் புகுந்து கொண்ட போதிலும், ஒரு எழுத்தாளரை அவர் வாழும் போதே வாழ்த்திய பணியை பாராட்டவே வேண்டும்.
>
> - இதயகன.

மேலே சதுரமிடப்பட்டுள்ள குறிப்பை அபிமானிகள் கவனிக்கவும். ஒருவரது வரலாற்றை இன்னொருவர் எழுதும்போது, ''அடிக்கடி இடையில் புகாமல்'' எப்படி அவரது வாழ்க்கையைத் தெரியப்படுத்துவது என்ற வித்தையை 'இதயக்கன' எனக்கும் சொல்லிக் கொடுக்கட்டும் ('இதயக்கன' என்றே 'இதயம் கன'த்தவரது புனைப்பெயர் அச்சாகிவிட்ட விந்தையையும் கவனிக்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21/22-4-96

# மதிப்புரை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிச்சுடர்

இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட உலகளாவிய தகவல்கள் அடங்கிய கை(கலை)க்களஞ்சியம்! தகவல்கள், தகவல்கள் ஏராள தகவல்க்ள் -நுழைந்து பார்த்தால் நூலின் எல்லா பக்கங்களிலும் மட்டுமல்ல, 'பிஸ்மி' சொல்லி தொடங்கும் முன்னுரையிலும் 'விடை பெறும் நேர' முடிவுரையிலும் கூட! மக்காவிலுள்ள புனித ஆலயம் கஃபத்துல்லாஹ் உட்பட உலகின் முக்கிய பள்ளிவாசல்களைப் பற்றிப் படங்களுடன் செய்திகள் சேகரித்தளிக்கப்பட்டுள்ளன. 'விக்கிரமாதித்தன் கதை' எழுதியவர் முஸ்லிம் என்பது அரிய தகவல். முதல் முஸ்லிம் வழக்கறிஞர் எம்.சி. அப்துல் காதர், முதல் திருக்குர்ஆன் தமிழாக்கம் தந்த ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி, அவர் புதல்வர் சிராஜுல் மில்லத் அப்துஸ் ஸமத், 'சீறாப் புராணம்' செய்த உமறுப்புலவர், நாகூர் ஹனீபா, கருணாமணாளன் ஆகியோர் பற்றி பயனுள்ள குறிப்புக்கள் தந்துள்ளார் ஆசிரியர். எகிப்தை ஆண்ட கிப்திகளின் அரசர் மகூகஸ்ஸுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அனுப்பிய அசல் கடிதத்தின் நகல் நூலில் இடம் பெற்றுள்ளது. கடிதத்தின் இறுதியில் 'முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்' என்ற முத்திரை காணப்படுகிறது. மேலும், அரபு மொழிச் சித்திர வடிவங்கள், சமய நல்லிணக்கத்தைப் பறைசாற்றும் குறிப்புக்கள், சின்னஞ்சிறு குர்ஆன் பிரதிகளின் படங்கள் -தகவல்கள் என்று கூடுமானவரை செய்திகளைத் திரட்டி வழங்கியுள்ளார் மக்கீன். பயனுள்ள பாராட்டத்தக்க முயற்சி. இதுபோல் இன்னும் பல நூற்களை அவர் ஆக்கியளிக்க வாழ்த்துக்கள்! இந்த நூலை வெளியிட்டுள்ளதோடு, இனி தொடர்ந்து முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியிடுவோம் என்று அறிவித்துள்ள மணிமேகலைப் பிரசுரத்திற்கும் வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம் புதிது:

“ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி வெங்கடசாமி தனது 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியம்' என்கிற நூலிலே பக்கம் 170-இல் சொல்வது இப்படி:' 1871-இல் அச்சுவாகனமேறிய விக்கிரமாதித்தன் கதை முஹம்மது இபுறாஹீம் சாயபு என்கின்ற தமிழ் முஸ்லிம் எழுதியது.'

இந்த வகையில் இயற்றமிழில் கதைக் காவியம் படைத்தளித்த முதல் உரைநடை நூலாசிரியர் ஒரு தமிழ் முஸ்லிம் என்பதை அறிந்து அதிசயப்பட வேண்டும். இந்த முஹம்மது இபுறாஹீம் சாயபு என்பவர் மண்டபம் மரைக்காயர் குடும்பத்தைச் சார்ந்தவர் எனச் சொல்லப்படுகிறது.''

-இது போன்ற ஏராளமான தகவல்களை 'முஸ்லிம் டைஜஸ்ட்' எனும் தலைப்பில் நூலாகத் தொகுத்துத் தந்துள்ளார், பிரபல இலங்கை எழுத்தாளர் மானா மக்கீன்.

நிறைய செய்திகள், எளிமையான விறுவிறுப்பான தமிழ்நடை, அழகிய அச்சமைப்பு என்று எல்லாவகையிலும் நூல் நன்றாகவே அமைந்துள்ளது.

புத்தகத்திலிருந்து சில பகுதிகள்:

★சீக்கியர்களின் பொற்கோயில் அமிர்தசரஸ் என்ற நகரில் உள்ளது. இந்தப் பொற்கோயில் பற்றிய ஒரு சுவையான தகவல். அந்தப் பொற்கோயில் கட்டப்பட முடிவான பொழுது அதற்கு அடிக்கல் நாட்டியவர் ஒரு முஸ்லிம் துறவியா (ஃபக்கீர்). இந்த தகவலை தைரியமா வெளியிட்டவர் மறைந்த திரு. பர்னாலா, ஒரு சீக்கியர். ஒரு சமயம் தமிழ்நாட்டின் ஆளுநர்.

★உலகின் முதலாவது இஸ்லாமியப் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டி 1933 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13இல் இருந்து 19-ஆம் தேதி வரை தெஹ்ரான் நகரில் நடைபெற்றது. பல முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த 407 வீராங்கனைகள் பங்கு பெற்றனர்.

★உலகில் நீங்கள் எந்த நாட்டுக்குப் பயணமானாலும் தொழும் திசையையும் (கிப்லா) தொழுகை நேரத்தையும் அங்கேயே கஷ்டமின்றி தெரிந்து கொள்ளலாம். புகழ் பெற்ற கெஸியோ நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு கடிகாரம் இதற்கு உதவுகிறது.

★'இளம்பிறையின் போது பழைய பிறையை என்ன செய்வார்கள்?' என்று சிலர் ஒரு சமயம் கேலியாக முல்லா நஸ்ருத்தீனிடம் கேட்க, 'பழைய பிறையை வெட்டி நட்சத்திரமாக்கிக் கொள்வார்கள்' என்று வெகு சாதாரணமாக அவரது பதில் வந்தது.

தேனீ

நூல் : முஸ்லிம் டைஜஸ்ட்
ஆசிரியர்: மானா மக்கீன்
பக்கம் : 128
விலை : ரூ.24/-
வெளியீடு: மணிமேகலை பிரசுரம்
தபால்பெட்டி எண்: 1447
4, தணிகாசலம் சாலை,
தி. நகர்,
சென்னை - 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம்

வெட்கத் … என்ன

… 20 -
… செல்வி
… ானி
அ… 8.)

… டே
உன் … ப்படி
முடி… ூக்களால்?' -
காதல் … தைகள்.

குமுதம்
மதி: 49 மலர்: 35
30.5.96

முஸ்லிம் டைஜஸ்ட்

(மானா மக்கீன் - பக். 128 - ரூ. 24 - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை-17.)

'விக்கிரமாதித்தன் கதையை எழுதியவர் ஒரு தமிழ் முஸ்லிம்' போன்ற இஸ்லாமியத் துணுக்குகள்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

(தா.வே. வீராசாமி - பக். 166 - ரூ. 45 - விற்பனை : சாகித்திய அக்காதெமி, குணா பில்டிங், 304-305, அண்ணாசாலை, சென்னை-18.)

பல்கலை அறிஞர் தெ.பொ.மீ. யின் வாழ்க்கை வரலாறும், சாதனைகளும்.

பெண்பாக் களஞ்சியம்

(உதகை பொன்னழகன் - பக். 268 - ரூ. 50 - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை-17.)

பெண்பாற் கவிஞர்களின் பாடல் தொகுப்பும், உரையும்.

---

பக்கம்: 128 விலை: 24.00

நூல்:- முஸ்லிம் டைஜஸ்ட்

வெளியீடு- மணிமேகலை பிரசுரம்

ஆசிரியர்:- இலங்கை தமிழ் மணிமானா மக்கீன்

படித்தோர் பலரும் அரியாத வியத்தகு உண்மைகளை தக்க ஆதாரங்களுடன் இந்நூலில் நம் வாழ்நாளில் காண முடியாத சில அரிய இடங்களை புகை படத்தின்மூலம் நம்மை கண்டு களிக்க வைக்கிறார். இஸ்லாத்தின் அனைத்து செய்திகளையும் சேர்த்து ஒரு அற்புத நூலை படைத்துள்ளனர்.

முஸ்லிம்களின் இல்லந்தோறும் அவசியம் இருக்கவேண்டிய நல்ல நூல்.

ஆசிரியர் இலங்கை தமிழ்மணி மானா மக்கீன் அவர்களுக்கு இந்நூல் மற்றொரு மணிமகுடம் என்பது மிகையாகாது.

— "மறுமலர்ச்சி"
(திருச்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவன் நூலகம்

முஸ்லிம் டைஜஸ்ட்

(மானா மக்கீன்)

இஸ்லாமியர்கள் பற்றி அரிய தகவல்கள் தொகுக்கப்பட்டு இருக்கின்றன.




விக்கிரமாதித்தன் கதை எழுதியவர் ஒரு முஸ்லிம். ஒப்பான் என்ற கிறிஸ்தவ மன்னன் தனது நாணயத்தில் கலிமாவைப் பொறித்திருந்தான் போன்ற தகவல்கள் இடம்பெற்று உள்ளன.

இதுதவிர பிரியாணி குறைந்து விட்டதா? ஒல்லியான உடம்பா? போன்ற பொதுப்படையான தகவல்களும் உண்டு.

(விலை ரூ.24.00. மணிமேகலைப் பிரசுரம், த.பெ.எண். 1447, 4, தணிகாசலம் சாலை, சென்னை-171.)

18-6-96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆனின் குரல்

நூலின் பெயர்: *முஸ்லிம் டைஜஸ்ட்*

தொகுப்பாசிரியர் : *இலங்கைத் தமிழ்மணி மானாமக்கீன்*

வெளியீடு : *மணிமேகலைப் பிரசுரம்*

தபால் பெட்டி எண் : 1447

4,தணிகாசலம் சாலை,

தி.நகர், சென்னை – 17

விலை : ரூ. 24/–

இந்நூலின் தொகுப்பாசிரியர், இலங்கையின் பிரபல எழுத்தாளரும், நாடறிந்த நாவலருமான தமிழ்மணி மானா மக்கீன் அவர்கள். இந்நூல் குறிப்பிடுவது போல, ஒரு சிறப்பான சமூகத்தின் குறிப்புகள் சில பல அடங்கிய தகவல் மஞ்சரி. பல்வேறு பள்ளிகளின் அழகிய அரபி வாசகங்கள், பல்வேறு வடிவ அமைப்பில் தரப்பட்டிருப்பது (Calligraphy வடிவ எழுத்துக் கலை) அனைத்துலக தெனாலிராமன் 'ஹோஜா'வின் நகைச் சுவைத் துணுக்குகள், சில முஸ்லிம் அறிஞர் பெருமக்களின் நிழற்படங்கள் ஆகியன இக்கதம்ப நூலுக்கு அணி சேர்க்கின்றன. தரமான தாளில் வெளியிடப் பெற்றுள்ளது. நமது பாதுகாப்புக்கு அல்குர்ஆன் கேடயங்கள்! ஒல்லி உடம்பா?– இஸ்லாம் வழங்கும் தண்ணீர் இப்படி, வேதங்கள் அனைத்திலும், கலிமா – கிறிஸ்துவ மன்னர் நாணயத்தில்! போன்ற பல துணுக்குச் செய்திகள் புதுமையும் அருமையும் மிக்கன. படிக்கவும் பாதுகாத்து வைக்கவும் ஏற்ற நூல் எனில் மிகையன்று.

திறனாய்வு – போராசிரியர் எரல்
ஜே. அஷ்ரஃப் அலி

ஜூலை 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் டைஜஸ்ட்

தனக்கென ஒரு தனிப்பாணி வகுத்துக் கொண்டு
எழுதிவருபவர் எழுத்தாளர் மானா மக்கீன் அவர்
கள் அமரர் தமிழ்வாணனின் சிஷ்யன் எனக் கூறுவ
தில் பெருமைகொள்ளும் மக்கீன், தமிழ் வாணனது
எழுத்து நடையைப் பின்பற்றுபவர் என்றும் கூற
ல்ராம்.

இவருடைய 'லைட்ரீடிங்' நூல்கள் வாசகர்களி
ன்டயே வரவேற்பைப் பெற்றவை. எளிய. இலகு
வான நடையில், பல்வேறு விடயங்களின் துணுக்குத்
தொகுப்பாக, இருபாகங்கள் வெளிவந்தன.

இவற்றைத் தொடர்ந்து பழம்பெரும் எழுத்தாளர்
அல்ஹாஜ் குலாம் ரசூல் அவர்களின் வாழ்க்கை வர
லாற்றைக் கொண்ட 'பேனா முனையில் அரைநூற்
றாண்டு' என்ற நூலினை எழுதி அண்மையில் வெளி
யிட்டார்.

இவற்றைத் தொடர்ந்து சென்னை மணிமேகலைப்
பிரசுரமாக 'முஸ்லிம் டைஜஸ்ட்' என்னும் நூல்
வெளிவரவிருக்கிறது. இதுவும் லைட்ரீடிங் போன்ற
ஒரு தகவல் தொகுப்பாகும். முஸ்லிம் தகவல்கள்
கூடுதலாக இருப்பது இதன் விசேட அம்சமாகும்.
அழகான அட்டையுடனும், அதிக படங்களுடனும்
இந்நூல் மலர்ந்திருக்கிறது.

இதுமட்டுமன்றி, 'என்னைக்கேளுங்கள்' என்
றொரு தொகுப்பு நூலும் தமிழ்மணி மானா. மக்கீ
னுக்கு உரியது. திருச்சி குலாம் ரசூல் 'மிஸ்டர் கொட்
டாப்புளி' என்ற பெயரில் 1952இல் 'ஷாஜஹான்'
இதழ்களில் எழுதிய கேள்வி பதில்களை என்னைக்
கேளுங்கள்' என்ற தலைப்பில் மானா தொகுத்திருக்
கின்றார். இதுவும் மணிமேகலைப் பிரசுரமாக வெளி
வரவிருக்கிறது. நாடகங்கள், கட்டுரைகள் ஆகியவற்
'ஷேற்யும் எழுதியுள்ள இவர், முன்னர் சில சிறுகதைக
ளையும் படைத்துள்ளார். தமிழகத்தின் மஞ்சரியி
லும் இவர் கட்டுரைகள் எழுதிவருகிறார்.

— 'வீரகேசரி'
(இலக்கிய மஞ்சரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கேளுங்கோ, பேனாமுனையில் அரை நூற்றாண்டு, முஸ்லிம்டைஜஸ்ட் இம் மூன்று நூல்களுக்கும் மொத்தத்தொகையான ரூபாய் 65/- க்கும் M.O. அல்லது DD அனுப்பினால் தபால் செலவின்றி அனுப்பப்படும். ஒன்று அல்லது இரண்டு நூல் மட்டும் தேவையானாலும் முன்பணம் அனுப்பிப் பெறலாம். முகவரிகள் ;

**அனஸ் புத்தக நிலையம்**
(நூஹூ புத்தக நிறுவனம்)
81, அங்கப்ப நாயக்கன் வீதி, சென்னை- 600 001,

**ரசூல் நியூஸ் ஏஜன்சி**
6, சிங்காரத்தோப்பு, திருச்சி-620 008.

வி.பி.பி மூலம் பெற வேண்டினால்,
**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண்.1447,
4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை-600 017.

**இலங்கை நேயர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :**
B-54-1/2 N.H.S. Maligawatte,
Colombo-10
Phone : 33 22 25

* **"என்னைக் கேளுங்கோ"** பற்றிய சஞ்சிகை விமர்சனங்கள் அடுத்தவெளியீட்டில்.

* ஆகஸ்ட் '96-ல் உலகளாவிய இளைய தலைமுறையினருக்காக வெளிவருகிறது. **"இனிக்கும் இஸ்லாமியக் கதைகள்"**

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களின் பெறுமதி இலங்கையில் மலிவு

- பேனா முனையில் அரை நூற்றாண்டு - 52/-
- முஸ்லிம் டைஜஸ்ட் - 48/-
- என்னைக் கேளுங்கோ - 30/-

பதிவுத்தபால் பார்சல் - 13/50

சாதாரணதபால் பார்சல் - 5/00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்சமயம் தமிழகத்தில் மாணாவின் வளர்ச்சி பிரகாச மாக இருக்கிறது. அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கள்.

*—லேனா தமிழ்வாணன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org